
# நெஞ்சம் நிறைந்த நேர்மைக் காவலர்

# டாக்டர் நாவலர்



தமிழ்நாடு
நிதியமைச்சர்

மாண்புமிகு
டாக்டர் நாவலர்

72-வது பிறந்தநாள் சிறப்புமலர் 11 - 7 - 1991

உலகத் தமிழ் எழுத்தாளர் பேரவை

வெளியீடு

# நறுந்தமிழ் அருவி நாவலர் வாழ்க!

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய பேரன்பைப் பெற்ற திராவிட இயக்கத்தின் வேர்களில் ஒருவர். பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று அழைக்கப்பெற்று, அவர்தம் அரசியல் வழித்தோன்றலாகவே கழகத்தின் பொதுச்செயலாளராக அமர்த்தப் பெற்றவர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் தீப்பொறிப் பாக்களைத் திக்கெட்டும் முழங்கியவர்.

'தனித்தமிழ் இயக்கத் தந்தை' மறைமலையடிகள் அடிச்சுவட்டில் 'நாராயணசாமி' என்னும் தமது இயற்பெயரை 'நெடுஞ்செழியன்' என மாற்றியதன் வாயிலாகத் தமிழர்களிடையே தூயத்தமிழ்ப் பெயர் சூட்டிக்கொள்ளும் ஒரு 'பெயர் மாற்றப் புரட்சிக்கே' வழிகாட்டியவர்.

'மன்றம்' ஏடு நடத்தி மாத்தமிழ் வளர்த்தவர். சங்க இலக்கியக் காட்சிகளைச் சிந்தை குளிரத் தந்தவர். திருகுறளுக்குப் புரட்சி உரை கண்டிருப்பவர்.

புரட்சித் தலைவர் ஆட்சியில் நிதியமைச்சராக இருந்தபோது 'பெரியார் வரலாற்றுக் குழு', 'பேரறிஞர் அண்ணா கருத்து மணிகள் தொகுப்புத் திட்டம்' போன்றவற்றை உருவாக்கித் தம் வழிகாட்டிகளுக்குப் பெருமை தேடியவர்.

இன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா தலைமையில் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நேர்மையின் காவலர்; நிருவாகச் சிற்பி; இன்னும் பல நேர்த்தியான தமிழ்வளர்ச்சிப் பணிகளை நிகழ்த்தவிருப்பவர்.

இவர் தாம் நறுந்தமிழ் அருவி—மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்.

தமது 72-வது அகவையில் அடிவைக்கும் வணக்கத்திற்கு உரிய இந்த அண்ணாவின் முதல் தம்பி நீடுழிவாழ நெஞ்சார வாழ்த்துகிறது - 'உலகத் தமிழ் எழுத்தாளர் பேரவை'

| கவிஞர் | கலைமாமணி | உதவிக்கரம் |
| --- | --- | --- |
| **அ மறைமலையான்** | **பட்டுக்கோட்டை குமாரவேல்** | **ஜி. முத்து** |
| தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் |

**உலகத்தமிழ் எழுத்தாளர் பேரவை**

60, [illegible]

# மாண்புமிகு தமிழக நிதியமைச்சர்
# டாக்டர் நாவலர்
# பிறந்தநாள் செய்தி

என்னுடைய 72-வது பிறந்தநாளை ஒட்டி, என்னிடத்தில் நட்புறவும், அன்பும் கொண்டு, என்னை ஆதரித்து, அரவணைத்து வரும் நண்பர்கள் பலரும், என்னை வரவேற்றும், பாராட்டியும் வாழ்த்துக்கள் வழங்கி இருப்பதற்காக என் உளங்கனிந்த நன்றியறிதலை, உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் பேரன்பையும், பேராதரவையும் பெற்றுத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை, மாண்புமிகு **புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா** அவர்கள் ஏற்று, வளம் பல காணவும், நலம் பல எய்தவும் திட்டமிடும் இந்த நேரத்தில், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, மக்கள் தொண்டு ஆற்றும் பணியைச் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து முடிக்க, அன்பர்கள் வழங்கியிருக்கும் வாழ்த்துரைகள் அனைத்தும் எனக்கு மேலும் மேலும் பொலிவும் வலிவும் ஊட்டுவனவாகும்.

தமிழ்நாட்டில் எல்லாவகையிலும் தமிழ்ப் பண்பாட்டு நெறிமுறை ஆட்சி வளர்ந்தோங்கி நின்று நிலைபெறச் செய்யவேண்டியதும், தமிழ்நாட்டை அலைக்கழித்து அல்லற்படுத்தி வரும் வன்முறைக்கும்பலை அடியோடு அகற்ற வேண்டியதும், சட்டம் - ஒழுங்கு நிலையைச் சீர்ப்படுத்த வேண்டியதும், பொருளாதார வளர்ச்சிக்கான மேம்பாடுகளைச் செய்யவேண்டியதும், பெருமளவில் தொழில் வளர்ச்சி காணவேண்டியதும், வேலை வாய்ப்புக்களைப் பெருமளவில் பெருக்கவேண்டியதும், ஏழை எளிய குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டியதும், ஏற்றமிகு தமிழகத்தை எழிலுறக் காண வேண்டியதும் இப்பொழுதுள்ள முக்கிய பணிகளாகும்.

இவற்றில் ஈடுபாடு கொள்வதில் என் முழுக் கவனத்தையும் செலுத்துவேன் என்பதே என் பிறந்தநாளில் நான் விடுக்கும் செய்தியாகும்.

வாழ்க பெரியார் — அண்ணா — புரட்சித்
தலைவர் - புகழ் !



பகுத்தறிவுத் தந்தை பெரியார்-
-கருஞ்சட்டை வீரர் நாவலர்



வெண்தாடி வேந்தர் பெரியார்—
இளந்தாடி வேந்தர் நாவலர்

# அன்று முதல் இன்றுவரை நல்ல பகுத்தறிவாளர்

## பகுத்தறிவுத் தந்தை பெரியார்

நாவலர் தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர். இப்போதுதான் அவர் பகுத்தறிவு வாதி என்பது இல்லை. மாணவப் பருவம் முதற்கொண்டே நாவலர் பகுத்தறிவாளராகச் சிறந்து விளங்கி வருகிறார்.

நமது நாவலர் மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையார் பெரிய வருமானம் தரும் பதவி எதிலும் இருக்கவில்லை என்ற போதிலும் நாவலர் தமது கல்வியை முடித்துக் கொண்டதும் நேராக என்னிடம் வந்தார்.

நான் இன்றைக்கு இருப்பதைப் போல அன்றைக்கு இருக்கவில்லை. இன்றைக்குப் பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லாரும் கூட என்னிடம் வந்து—

''அய்யா எனக்கு உதவி செய்யுங்கள்'' என்று கேட்கிறார்கள். ஆனால் அன்று நான் அப்படிப்பட்ட நிலையில் இல்லை.

ஆயினும், ''நான் தங்களுடன் இருந்து தொண்டு செய்கிறேன்; எனக்குச் சோறு மட்டும் போட்டால் போதும்; வேறு சம்பளம் எதுவும் வேண்டாம்''

—என்று நாவலர் சொன்னார்.

எம்.ஏ., படித்தவர் இப்படிச் சொன்னார்!

இன்றைக்கு இருப்பது போல எம்.ஏ., படிப்பு அவ்வளவு சல்லிசானதாக அப்போது இருக்கவில்லை.

நாவலரும் நாவலர் போன்று என்னிடம் வேலைக்கு என்று சேர்ந்தவர்களும் என்னிடம் வேலை எதுவும் பழகவில்லை; எனக்கே கற்றுத் தரும் அளவுக்கு அவர்கள் இருந்தார்கள். எனக்கே பாடம் கற்றுத் தரும் அளவுக்குத் தகுதி படைத்தவர்களாக இருந்தார்கள்.

அப்போதெல்லாம் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பது நாத்திகப் பிரச்சாரம் என்று அழைக்கப்பட்டது. அதனை இப்போது தான் அனைவருமே பகுத்தறிவுப் பிரச்சாரம் என்கிறார்கள்.

அப்போது நாத்திகப் பிரச்சாரம் செய்வது என்பது இலகுவான வேலையல்ல; மிகவும் ஆபத்தான பணி! அப்போது முதல் இப்போது வரை நாவலர் நல்ல பகுத்தறிவாளராகவே இருந்து வருகிறார்.



தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
மாண்புமிகு பேரறிஞர் அண்ணா—
தமிழ்நாடு இந்நாள் நிதியமைச்சர்
மாண்புமிகு டாக்டர் நாவலர்

# வயதால் தம்பி பதவியால் தலைவர்

## பேரறிஞர் அண்ணா

நமது பொதுச்செயலாளரை,

'தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம் வா!' -என்று நான் கூறியது வெறும் அலங்காரத்திற்காக அன்று

அந்த நிலை நமது கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது -மேலும் வளர வேண்டும்- என்பதுதான் எல்லாருடைய உண்மையான நம்பிக்கை அப்படி வளர்ந்தால் தான் நம்முடைய கழகம் நல்ல சனநாயகப் பண்போடு திகழ முடியும்.

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் நமது கழகத்திற்குப் பொதுச்செயலாளராகக் கிடைத்துள்ளார். அவர் இடுகின்ற ஆணைகளை ஏற்று நடத்துவதில் நான் பெருமை கொள்கிறேன். நமது தோழர்களும் பெருமை கொள்ள வேண்டும்.

''நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக்காக்கும் காவலரே! என் தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகப் பொதுச்செயலாளராக ஆக்கப்பட்டு இருப்பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் தயாராக இருக்கிறேன்.''

-என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் மற்ற அத்தனை பேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் கூறுகிறேன்.

என்னிடம் உள்ள சில குறைபாடுகளும் நீக்கப்பட்டுப் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை - நாவலரை - இன்றைய தினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச் செயலாளராகப் பெற்றிருக்கிறோம்.

தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான்- வயதில்.

உண்மையில் அவரைத் தம்பி’ என்று அழைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். என்னை ‘அண்ணன்’ ஆகக் கொண்டிருப்பதில் அவரும் பெருமைப் படுகின்றார்.

ஆனால் அவர் பொதுச் செயலாளர் பதவியில் இருக்கிற நேரத்தில் அவர் இடுகின்ற அத்தனையையும் நான், ஒரு தலை

## என் எண்ண விதைகளுக்கு ஏற்ற கழனி

நான் ஏழெட்டு ஆண்டுக் காலமாகக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து, எண்ணி எண்ணிச் சிந்தித்து, இருபத்து நான்கு மணி நேரமும் உடனிருந்து — ‘காரியங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டும்; இப்படி இப்படி நடந்தால்தான் நல்லது’ – என்றெல்லாம் எடுத்து சொல்லி ‘இந்த விதைகள் எல்லாம் வளரக்கூடிய நல்லதோர் கழனி’ அந்த உள்ளத்தில் இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பை தோழர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைந்தேன்.

- பேரறிஞர் அண்ணா

வன் இடுகின்ற கட்டளையாக ஏற்று, அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்பதை இந்த மாநில மாநாட்டில் நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

[திருச்சியில் 1956-ல் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை.]

● ● ●

## நாவலரின் அருங்குணம்

என்னிடம் இல்லாத - நான் விரும்பாததால் அல்ல, இயலாததால் - ஓர் அருங்குணம் அவரிடம் உண்டு; கண்டிருப்பீர்கள்.

ஓயாது உழைப்பது; எப்போதும் எங்கேயும் எதையாவது செய்துகொண்டே இருப்பது.

என்னாலே இதைக் கண்டு இரசிக்க முடியும்; ஆனால் என்னை அந்நிலைக்கு மாற்றிக் கொள்ள இயலவில்லை. நான் அடிக்கடி கனவு காண்கிறேன்: சோலையில் சொகுசாக உலவுவது போல அல்ல- அந்தக் காலம் மலையேறி விட்டது!

பொதுப் பிரச்சினைப் பற்றி தோழர் நெடுஞ்செழியன் எப்போதும் காரியம் ஆற்றிக் கொண்டே இருக்கும் இயல்பினர் நேரம் வீணாகி விட்டது என்று கூறத்தக்க போக்கிலே அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை. இந்த இயல்பு கழகத்துக்குப் பெருந்துணை அளிக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

சிறையில் மூன்று திங்கள் ஒரே அறையில் தங்கி இருந்தோம். அங்கு என்னவென்று கருதுகிறீர்கள்.?

.. பலப்பல (அரசியல்) கனவுகள்- விழித்தபடி நான் கண்டுகொண்டு இருப்பேன்.

அவர்? வேலை! வேலை! வேலை! ஏதாவது செய்துகொண்டே இருப்பார்.

இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்தி கழகத்தை மேன்மையுறச் செய்து கொள்ள வேண்டும். ●

ஆதாரம்: 'தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்' (முதற் பகுதி)

## என் ஆசை நடமாடும் நாவலர் பேச்சு

தமிழ் எப்படிப் பேசுவதற்கு உரியது; இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பம் அளிக்கும் என்றெல்லாம் நான் பல முறை எண்ணிப் பார்த்தது உண்டு. என் மனதிலே உருவெடுத்துக் கொண்டிருந்த ஆசை நடமாடக் கண்டேன் - தோழர் நெடுஞ்செழியன் கழக மேடையில் பேசத் தொடங்கியதும்!

- பேரறிஞர் அண்ணா



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.—டாக்டர் நாவலர்



# மக்கள் மன்றத்தில் மங்கா புகழ் நாவலர்

## முன்னாள் தமிழக முதல்வர்

## மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர்

பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று அழைக்கப் பெற்றவர் நமது மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் !

அவருடைய பிறந்த நாள் இன்பம் நிறைந்த நாளாக—துன்பம் துயரமெல்லாம் பறந்த நாளாக—அந்தத் தூய தொண்டுள்ளத்தில் அமைதி சிறந்த நாளாக அமைந்திட வேண்டுமென்று முதலில் என் இதய நிறைவான நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அறியாமை இருள் அகன்றிட, அறிவு ஒளி பரவிட, வளம் பெருகி வறுமை நீங்கிட, துன்பம் போக, இந்நாட்டு மண்ணில் இன்பம் மிக; வாட்டம் நீங்கி வாழ்வு மலர, அய்யா

அவர்கள் சுயமரியாதைச் சுடர் கொளுத்திக் குரல் கொடுத்த நேரத்தில், அப் பெரியாரின் பாசறையிலே இளந்தாடி வேந்தராக – பாசமிகு நல்தொண்டராக விளங்கியவர்தாம் நமது நாவலர்கள் அவர்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் நாவலர்தம் அறிவுக்கு— ஆற்றலுக்கு — உழைப்புக்கு — நேர்மைக்கு—நாணயத்திற்கு—ஒழுக்கத்திற்கு— உயர்விற்கு — அன்புக்கு—அடக்கத்திற்கு என்றும் பெரும் மதிப்பளித்து வந்தார்கள்.

அந்தக் காரணத்தினால்தான் 1956 மேத் திங்களில் நடைபெற்ற திருச்சி மாநில மாநாட்டிலே தாம் வகித்து வந்த பொதுச் செயலாளர் பொறுப்பினை நாவலர் அவர்களுக்கு அளித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அகமகிழ்ந்து. 'தம்பி வா, தலைமை ஏற்று நடத்த வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்!'' என்று குறிப்பிட்டார்கள்.

அந்தப் பெரிய இதயத்தாலே இப்படிப் போற்றிப் புகழப்பட்ட நாவலர் அவர்களை இன்றைய தினம் நாம் நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெற்றிருக்கிறோம் இந்தக் காரணத்

## அண்ணா ஆக்கிய பொதுச் செயலாளர்

**திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக நாவலர் திகழ்ந்த நேரத்தில் — நான் ஒரு தொண்டனாக இயக்கத்தில் சேர்ந்தேன்.**

**கழகத்திற்குப் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றக் கூடிய தகுதியும் திறமையும் அவருக்கு உண்டு என்பதைக் கண்டறிந்து அவரைப் பொதுச் செயலாளர் ஆக்கியவர் அறிஞர் அண்ணா.**

**நானும் அவர் காட்டிய வழியைத்தான் பின்பற்றி நடக்கிறேன்.**

— புரட்சித்தலைவர்
எம். ஜி. ஆர்.

தாலேயே நாம் நம்மோடு எல்லாச் சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

1939-ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழக இடைநிலை முதல் வகுப்பு மாணவராகப் பயின்ற பட்டுக்கோட்டை இரா. நாராயணசாமி அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை பிரச்சாரத்தாலே கவர்ந்திழுக்கப்பட்டு, அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அவர்களின் வாதத் திறத்தை அடியொற்றி நடந்து, 'நெடுஞ்செழியனாகி', மண்டும் மதங்கள் அண்டா நெருப்பாய் — படரும் சாதிப் படைக்கு மருந்தாய் — செந்தமிழ்த் தேனீயாய் — பைந்தமிழ்த் தேர்ப்பாகனாய் வளர்ந்து — இன்று நம் இதயம் கவர்ந்தவராய் — நல்ல தமிழ் நாவலராய்க் காட்சியளிக்கிறார்கள்.

நுனிப்புல் மேய்ந்துவிட்டுத் தலைகால் புரியாமல் குதிக்கின்தவர்களைப் பார்க்கின்றோம். அப்படியல்ல நாவலர் அவர்கள். எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலாளர், அழகு தமிழ்ப் பேச்சாளர்!

"கேட்டார் பிணிக்கும்
தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் சொன்னதற்கேற்ப, நாவலர் அவர்கள் சொல்லாற்றல் மிக்கவர். வாதத் திறமையில் அவரை வெல்ல அவாலேயே முடியும் என்கிற அளவிலே ஒப்பாரும் மிக்காரும் அற்றுத் திகழும் உயர்வாளர்

தனக்கெனத் தனிப் பாணி வகுத்துக் கொண்டு பேச்சையும் எழுத்தையும் கையாளும் பெருந்தன்மையாளர்!

நாவலரின் எழுத்துக்களிலே இதமான தென்றலை மட்டுமல்ல; எரிமலையின் வேகத்தையும் உணரலாம். அவர்தம் பேச்சிலே புயலை மட்டுமல்ல; பைந்தமிழ் இலக்கியத்தின் பாங்கையும் உணரலாம்.

தேனியில் அவர் தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்ட பின்னாலேயும், ஏற்றுக் கொண்டிருந்த கொள்கைக்காக எதையும் தாங்கும் இதயத்தோடு தொண்டுப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திப் பெருமை கொண்ட நாவலர் அவர்கள் பதவிப் பற்று சிறிதும் அற்றவர்.

ஒன்பதாண்டுக் காலம் அமைச்சராக இருந்தவரென்றாலும் இப்போது நமது நிதியமைச்சராக இருப்பவரென்றாலும், பதவியில்லாத காலத்திலேயும் சிலரைப் போல் செல்லாக் காசாகிவிடாமல் மக்கள் மன்றத்திலே என்றும் மங்காப் புகழோடு திகழும் நாவலர் அவர்களை — மக்களோடு ஒன்றிப்போன ஓர் உத்தமரை இன்னும் பல்லாண்டு நீடுவாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்.

[ஆதாரம்:
டாக்டர் நாவலர்
மணிவிழா மலர் – 1980]

# புரட்சித் தலைவர் அடிச்சுவட்டில் புரட்சித் தலைவி அமைச்சரவை

கவிஞர் அ. மறைமலையான்

பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்திலே 'மூத்த தம்பி' என்னும் ஈடில்லாத இடத்தைப் பெற்றவர் டாக்டர் நாவலர். 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று அவராலேயே அழைக்கப் பெற்றவர்.

அத்தகைய பெருமைக்குரியவர் தமது அமைச்சரவையில் தமக்கு அடுத்த இடத்தில் இருந்தால்தான் தமக்கும் பெருமை, திராவிட இயக்கத்துக்கும் பெருமை என்று எண்ணினார் புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். ஆகவே நாவலர் அவர்களை நிதியமைச்சர் ஆக்கி மகிழ்ந்தார்.

'புரட்சித்தலைவர் ஆட்சியை மறுபடியும் தமிழகத்தில் மலரச் செய்வோம்!' என்று தேர்தல் களத்தில் எழுச்சி முரசு கொட்டினார் புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா.

'ஒரு நடிகையைப் போய் 'புரட்சித்தலைவி' என்று அழைக்கிறார்களே!' என்று ஏளனமாய்ப் பேசி இழிமொழிகளை வாரி இறைத்தவர்கள் பலர். அவர்கள் எல்லாரும் இடறிவிழுந்து, இடுப்பொடிந்து, தலை குனிந்து தரையிலே புரளும் அளவுக்கு இன்று தமிழகத் தேர்தல் வரலாற்றிலேயே ஒரு மாபெரும் புரட்சியை நிகழ்த்தித் தாம் ஒரு 'புரட்சித் தலைவியே!' என்று மெய்ப்பித்து விட்டார் செல்வி. ஜெயலலிதா!.

இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் சரி, ஏன் உலகின் வேறு எந்த நாட்டிலும் சரி, முன்னர் ஆட்சிக் கொலுவில் அமர்ந்திருந்த ஒரு பெரிய அரசியல் கட்சி ஒரே ஒரு இடத்தைக் கூடத் தக்க வைத்துக்கொள்ள முடியாமல் தோல்விப் பாதாளத்தில் சுருண்டு விழச்செய்ததாக வரலாறு இல்லை. அந்த இணையில்லாத அரசியல் புரட்சியை நிகழ்த்தியவர் செல்வி. ஜெயலலிதாவைத் தவிர இதுவரை வேறு எவருமே இல்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இத்துணை ஈடில்லா வெற்றி மலைமுகட்டில்ஏறி நின்றும்கூட திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களை மதிக்கும் விழுமிய பண்பாட்டோடு விளங்குகிறார் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித்தலைவி செல்வி. ஜெயலலிதா அவர்கள்.

புரட்சித்தலைவர் ஆட்சி மறுபடியும் மலர்ந்திருக்கிறது என்பதற்கு ஓர் அழகிய அடையாளச் சின்னமாகவே அமைந்



தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி
செல்வி ஜெயலலிதா அவர்களுடன்
நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்
சந்தித்து மகிழும் காட்சி

துள்ளது புரட்சித் தலைவியின் அமைச்சரவை.

முதல் எடுத்துக்காட்டாக நம் எண்ணத்திற்கு விருந்தளிப்பவர் - 'உலகப் பொதுஅறிவின் ஒப்பற்ற ஒளிவிளக்கு' டாக்டர் நாவலர் அவர்கள்.

புரட்சித்தலைவர் அமைச்சரவையில் நிதியமைச்சராக இடம் பெற்றிருந்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள், புரட்சித்தலைவியின் அமைச்சரவையிலும் நிதியமைச்சராக இடம் பெற்றிருப்பது திராவிட இயக்கப் பகுத்தறிவாளர்களையெல்லாம் தேனாற்றில் நீச்சலடிக்கச்செய்யும் காட்சியாகும்.

அத்துடன், பெரியார் - பேரறிஞர் அண்ணா-புரட்சித்தலைவர் ஆகியோர் அடிச்சுவட்டில் திராவிட இயக்கத்திற்காகத் தியாகத் தழும்புகளை ஏற்ற ஏனைய மூத்த தலைவர்களான

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி,

மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம்,

மாண்புமிகு இராம. வீரப்பன்,

மாண்புமிகு க. இராசாராம்,

மாண்புமிகு டாக்டர். கே. அரங்கநாயகம்,

மாண்புமிகு எஸ். முத்துசாமி

ஆகிய முன்னாள் அமைச்சர்கள், தம்முடைய அமைச்சரவையிலும் இடம் பெறச் செய்துள்ள மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பரந்த மனப்பாங்கு பாராட்டுக்கு உரிய அரசியல் பண்பாடாகும்.

பொதுவாக - 'புரட்சித் தலைவர் அடிச்சுவட்டிலேயே புரட்சித்தலைவி நடைபோடுகிறார்' என்கிற போற்றிப் பாசுரத்தின் முதற் பல்லவியே தமிழகத்தின் புதிய அமைச்சரவை!

---

நான் இன்று முதல்வர் ஆசனத்தில் இருக்கிறேன் என்றால்— இதனை அடைய மலர்கள் தூவிய பாதையில் வரவில்லை.

கரடு முரடான பாதையில் கல்—முள் தாண்டி, கல்லடி-சொல்லடி பட்டு, போராடிப் போராடி இந்த நிலையை அடைந்தேன்.

—மாண்புமிகு
புரட்சித் தலைவி
[9-7-91 சட்டமன்றப் பேச்சு]

# நாவலர் எழுதும் வரலாறு

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்க்கை ஆள்வினைக்குரியது; இன்பத்திற்குரியது. ஆனால், இன்பத்தின் வாயில் துன்பமே என்பது வள்ளுவத்தின் கருத்து. துன்பத்தைச் சுவைத்தறிபவர் அறிவறிந்த ஆள்வினையாளர் ஆவர், துன்பத்தில் துவள்பவர்கள் தோல்விகளையே தழுவுவர். துன்பத்தால் தாக்கப் பெற்றாலும் தாக்குண்டு அழியாமல் துன்பத்தைத் திருப்பித் தாக்குபவர்கள் வாழ்வர்ங்கு வாழக் கற்றவர்கள் இதனை வள்ளுவம்,

''இடும்பைக்கு இடும்பை
படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்''

என்று கூறுகிறது.

இத் திருக்குறள் வாழ்க்கைக்கு இலக்கணம். இத்திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் பலர் எழுத்துக்களால் உரை எழுதி உள்ளனர். ஆனால் வாழ்க்கையால் உரை எழுதுபவர் அரியர். இருபதாம் நூற்றாண்டு இடும்பைக்கு இடும்பை தரும் தலைமகனைக் கண்டது. அத் தலைமகன் புரவலன் போலும் தோற்றம் அளிப்பார். ஆனாலும் எளிமையானவர். நாட்டு மக்களுக்கு நயம், தீது எடுத்து நயந்தினிது கூறும் அறிஞர். மனிதகுலச் சாதி இழிவுகளைச் சாடி எதிர்த்துப்போராடி இடர் பல ஏற்றவர். அன்னைத் தமிழின் நலம் காக்கச் சிறைச்சாலையில் தமிழ்த்தவம் செய்தவர். பரம்பரைத் தொழிலைப் பாட்டாளிகளுக்கு உரிமையாக்க முயன்ற குலக் கல்வித் திட்டத்தைச் சந்தித்துப் போராடி வாகை சூடியவர்; விழுப்புண் பட்டவர்.

அறிஞர் அண்ணாவால் 'தலைவர்' என்று அழைத்துப் பெருமைப்படுத்தப் பெற்றவர். தன்மானத்தைவிட இனமானம் பெரிதென்று கருதி இழப்புகளையும் ஏற்றுக்கொண்ட ஏந்தல். இனநலம் கருதி இழிசொற்களையும் பழிச்சொற்களையும் ஏற்று நோற்றவர். இனநலத்தைவிட உரிமைச் சுற்றம் பெரிதெனக் கருதியவர்கள் அள்ளி வீசியபொழுதும் வாளா இருந்து

இனநலத்திற்காக நோன்பு இயற்றியவர். இடர்கள் பலவற்றைக் கடந்து துன்பம் சுடச் சுட நோற்று இன்று வாகை சூடி வலம் வருகிறார்.

அவர் யார்? அவர்தான் நமது நாவலர்.

நாவலர் 'மன்ற'த்தில் எழுதிய எழுத்துக்கள் தமிழினத்தின் வரலாற்றுக்குப் புத்துயிரூட்டுவன. சென்ற காலத்துப் புகழ்பூத்த, வாழ்வைத் தமிழகத்திற்குத் தரும் திறனுடையன. நாவலர் 'மன்ற'த்தில் அறிவிக்கும் ஆணைகள் நலிவுற்றோரை வாழச் செய்யும் தகுதியுடையன.

நாவலர், மக்கள் மன்றத்தில் இன்பத் தமிழில் யாழிசை கூட்டிப், பெருமித உணர்வுடன் வழங்கும் உரைகள் தமிழக வரலாற்றுக்கு விசையூட்டுவன நாவலர் நாவசைவில் தமிழ்த் தாய் களிநடம் புரிகிறாள். வள்ளுவத்தின் அறநெறியும் சிலம்பின் சீர்த்தியும், கலித்தொகையின் மாட்சியும், சங்கத் தமிழின் சந்தமும் இழைந்து மிளிர்வதைக் கண்டு கேட்டு மகிழாதார் யார்?

இத்தகு, பீடுசால் பெருமை நாவலரிடம் அமைந்ததற்கு அடிப்படைக் காரணம் அவர் சங்க இலக்கியத்தில் தோய்ந்தவர்; திருக்குறளில் தெளிந்தவர். சங்ககாலத்தில் புகழ் பழுத்த வாழ்வை மீண்டும் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்ற ஆர்வலர். இந்த இலட்சியத்திற்காக எதையும் ஏற்றுக்கொள்ளும் இதயத்தைப் பெற்றவர். அவரை இடும்பைகள் சுற்றி வளைத்துத் தாக்கின. ஆனால் அவருடைய தறுகண் மிக்க நெஞ்சும், திண் தோள்களும் அந்த இடுக்கண்களைத் தாக்கி வெற்றி கொண்டுவிட்டன. அவர் வெற்றியில் தமிழகத்தின் புதிய வரலாறு எழுதப் பெறுகிறது. அவர் வெற்றியில் மன்றங்கள் மகிழ்வடைகின்றன. தமிழகமே மகிழ்கிறது.

நாவலர் தமிழேபோல் வாழ்க!

[ஆதாரம்: டாக்டர் நாவலர் மணிவிழா மலர்-1980]

---

## அண்ணாவையே ஆளாக்கிய பெரியார்

**என்னைப் போன்றவர்களை**
**அனைத்துத் துறைகளிலும்**
**ஆளாக்கி விட்டவர்**
**பேரறிஞர் அண்ணா.**

**அத்தகைய அண்ணாவையே**
**ஆளாக்கி விட்டவர்**
**பெரியார்!**

**டாக்டர் நாவலர்**

# பாவேந்தருக்கு ஒரு பாஸ்வெல்

முன்னாள் துணைவேந்தர்
டாக்டர் சை. வே. சிட்டிபாபு

பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் மேடையில் தோன்றி, தமிழ் உலகில் வரலாறு காணாத ஒரு மறுமலர்ச்சியைத் தமக்கே உரிய புதிய நடையில்—புதிய பாணியில் எழுத்தாலும் பேச்சாலும் உருவாக்கினார்கள். அந்த வரலாற்று நாயகனைப் பின்பற்றித் தன்மானக் கொள்கை துள்ளும் இளஞாயிறு என நாவலர் தமிழ் வானில் தோன்றி ஒரு புத்தொளியைப் பரப்பினார். பேராற்றல் பெற்ற பெரும் புலவரும் பாராட்டிப் புகழும் சொற்கொண்டலாக மிளிர்ந்து வருகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் மாணவராக இருந்தபோது, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அவரது படைத் தளபதி பேரறிஞர் அண்ணா, புலமை வீரர் மறைமலையடிகள் ஆகிய மூவரையும் அழைத்து வந்து அவர் தம் புரட்சிகரமான கருத்துக்களை மாணவர் மனத்தில் பதிய வைத்து, வெற்றிச் செம்மலாகத் திகழ்ந்த காட்சி இன்னும் நம் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டுதான் இருக்கிறது.

டாக்டர் ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல் போல, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு நாவ

---

**ஒளி குன்றாத பொன்மனச் செம்மல்**

**புரட்சித் தலைவர்**
**'பொன்மனச்செம்மல்' என்று**
**எல்லாராலும் புகழப்படுவர்.**

**பொன் எந்த நாளிலும்**
**எந்த வகையிலும்**
**தானும் கெடாது;**
**பிற பொருளையும் கெடுக்காது**

**பொன்னை எவ்வளவுதான்**
**காய்ச்சி, வாட்டி வதைத்தாலும்**
**அதன் ஒளி குன்றாது**
**அது போல —**

**பொன்மனச் செம்மலின்**
**உள்ளமும்**

**எவ்வளவு தாக்குதல்**
**நடை பெற்றாலும்**
**குறைவு படாது.**

**டாக்டர் நாவலர்**

லர் ஒரு பாஸ்வெல்! தாம் சொற் பெருக்கு ஆற்றிய ஆயிரக்கணக்கான கூட்டங்களில் பாவேந்தரின் கவிதைகளை நாவலர் அறிமுகப்படுத்தியதை யாரும் மறுக்க முடியாது; மறக்க முடியாது. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர் மனங்குளிர குற்றால அருவியைப் போல் அவர் கவிதைகளைக் கொட்டி முழக்கினார்.

'மன்றம்' கண்ட பேராசான், தென்றல் என மக்களை மகிழ்விப்பவர். இம்மியும் கடமை மறவாதவர். அமுதச் செந்தமிழ் மொழி வளர்ப்பவர். அறிவுக்கும் அறிவியலுக்கும் கச்சை கட்டிக்கொண்டு சிங்க முழக்கம் செய்து வருபவர். மனிதத் தன்மையோடு என்றும் நன்றே நினைத்து வாழ்ந்து வரும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் வாழ்க பன்னெடுங் காலம் என மனங்குளிர, நா மணக்க, வாய் இனிக்க வாழ்த்திப் பூரிக்கிறேன்.

---

## பெரியாராலும் குறை காணமுடியாதவர்

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார் தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார். அவரால் யார் மீதும் குற்றம் காணமுடியும். ஆனால், தோழர் நெடுஞ்செழியனிடம் அவராலும் ஒரு குறை கூடக் கண்டறிந்து கூற இயலவில்லை! அத்தகைய பணியாளர் நமக்கு - நமது கழகத்துக்குக் கிடைத்திருக்கிறார்.

- பேரறிஞர் அண்ணா



முன்னாள் இந்தியப் பிரதமர்
திரு. இராஜீவ் காந்தி—டாக்டர் நாவலர்

ஒழுக்கத்தில்—உத்தமர்

கடமையில்—கலங்கரை விளக்கம்

கட்டுப்பாட்டில்—சிறந்தவர்

என்று நாட்டு மக்கள் போற்றும் அளவுக்கு உயர்ந்து நாட்டு நலன் கருதி 'உலகம் சுற்றும் வாலிபனாக' வெளிநாடுகள் பல சென்று வந்தவர் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் வாக்குப்படி, அவருக்கு அரசியலில் துன்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் சிந்தித்துச் சிரித்துச் செயல்பட்டு வெற்றி கண்டவர்.

இந்தி எதிர்ப்பு அவருக்குக் கைவாள்.

இன உணர்வு அவருக்கு இன்பத் தேன்.

பகுத்தறிவு அவருக்குப் பாற்கடல்.

பணவீக்கம் அவருக்குப் பகைவன்.

மூடக்கொள்கைகள் அவருக்கு முதல் எதிரி.

மூத்த தலைவர்கள் அவருக்கு முன்மாதிரி.

தமிழ் மொழி அவருக்குத் தாய்.

தமிழகத்துக்கு அவர் ஒரு போர்வீரன்.

அண்ணாவுக்கு அவர் மூத்த தம்பி.

அன்புத் தம்பிகளுக்கு அவர் காலக் கண்ணாடி.

அன்பும், பண்பும், அடக்கமும் யாரிடமெல்லாம் இருக்கிறதோ அவர்கள் உள்ளத்திலெல்லாம் நிறைந்திருப்பவர் நாவலர். அத்தனை பண்புகளும் அவரிடம் இருந்ததால்தான் அண்ணா அவரைத் தன் முதல் தம்பியாக ஏற்றுக்கொண்டு "தம்பி வா! தலைமை தாங்க வா!" என்று அழைத்தார்கள்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாவலரை அழைத்து அண்ணா தி.மு.க.வின் தளபதியாக்கிப் 'புறப்படுங்கள், போருக்கு' என்று தேர்தலில் போட்டியிட அனுப்பினார்கள்.

வெற்றி வாகை சூடி வந்த அந்த வீர மகனுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி மாலை சூடி அமைச்சராக்கியபோது, எங்கள் ஊர் மண்ணின் மணம் நாடெங்கும் வீசுவதை உணர்ந்து மகிழ்ந்தேன்.

இன்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களும் டாக்டர் நாவலர் அவர்களை நிதி அமைச்சராக அமர்த்திய உயரிய பண்பினைக்காண என் நெஞ்சத்தில் மகிழ்ச்சி நிறைகிறது. எங்கள் பட்டுக்கோட்டைக்குக் கிட்டிய பாராட்டாகவே இந்தப் பதவி நியமனத்தை எண்ணி இதயம் களிக்கிறேன்.

வாழ்க நாவலர்.

# எங்கள் மண்ணின் மணம்

கலைமாமணி
பட்டுக்கோட்டை குமாரவேல்

பட்டுக்கோட்டை மண்ணுக்குத் தனி மணம் உண்டு. தேச பக்தர்களை, கவிஞர்களை, எழுத்தாளர்களை, அரசியல் தலைவர்களை நாட்டுக்குத் தந்து பெருமை அடைந்து கொண்டிருக்கும் ஊர்.

மக்கள் மனத்தில் 'தமிழன் என்ற இன உணர்வைத் தேடித் தந்தவர் பட்டுக்கோட்டை திரு. அழகிரிசாமி அவர்கள்.

அவர் செய்த பகுத்தறிவுப் பிரச்சாரம் பட்டி தொட்டிகளில் இருக்கும் பாமர மக்களின் குருதியில் பாய்ந்து அவர்கள் சிந்தனையைக் கிளறிவிட்டது.

பகுத்தறிவுத் தந்தை, தமிழ்க் குலத்தின் விடிவெள்ளியாம் பெரியாரின் முதல் சீடரான அழகிரிசாமியைத் தமிழகத்துக்குத் தந்த பெருமை பட்டுக்கோட்டை மண்ணுக்குத்தான் உண்டு.

''கண்மூடிப் பழக்கமெல்லாம் மண் மூடிப் போக'' என்று வீர முழக்கமிட்டுத் தன்னை மெழுகு வத்தியாக்கிக் கொண்டு நடத்திய போராட்டங்களைப் பார்த்துத்தான், 'அஞ்சா நெஞ்சன்' அழகிரிசாமி என்று மக்கள் புகழ் மாலை சூட்டினார்கள்; புகழ் அஞ்சலி பாடினார்கள்.

பெரியார் பாசறையில், அவர் சொல்லும் செயலுமாய் வாழ்ந்தார். போராட்டங்கள் பல கண்டு அவர் வெற்றி வாகை சூடிய நிகழ்ச்சிகள் மாணவர் நாராயணசாமியாக இருந்த நெடுஞ்செழியன் அவர்களை, தந்தை பெரியாரின் சுயமரியாதை தொண்டர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்தது.

அன்று சுயமரியாதை வித்தாகி அந்த மண்ணில் முளைத்தவர் இன்று தமிழக மக்களின் வழிகாட்டியாக வாழ்கிறார். தன் கடின உழைப்பால் தன்னை உயர்த்திக் கொண்ட தலைவர்.

கல்வியில்—பல்கலைக் கழகம்.

அறிவில்—அண்ணா

பேச்சில்—நாவலர்

பண்பாட்டில்—பெரியார்

# முத்தமிழ் வித்தகர் நாவலர்

சி. நல்லரசு, எம். ஏ., பி.டி.,

நாவலர் என்றால் நாவன்மை உள்ளவர் என்று கூறுவதைவிட, இரா. நெடுஞ்செழியன் என்று பொருள்கூறும் நிலையில் இன்றைய தமிழகத்தில் நாவலர் என்ற சொல் நெடுஞ்செழியன் அவர்களுடன் உறவுகொண்டு இரண்டறக் கலந்துவிட்டது. தாம் கற்றதை மற்றவர்க்கு உரைக்க வேண்டும். அவர்கள் உளங்கொள்ளும் அளவுக்கு எளிமையும் இனிமையும் பொருள் தெளிவும் மிளிர உணர்த்த வேண்டும். இல்லையேல் ஒருவர் எவ்வளவு கற்றிருப்பினும் அவர் முற்றும் மலர்ந்தும் முகர்வதற்கு ஒன்றுமில்லா வெற்றுக் கொத்து மலர்க்கு ஒப்பாவர் என்று நாலும் கற்றிருப்போரைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

புலமைச் செறிவு; புரியவைக்கும் திறன்; சொல் வளத்தின் சுவை; எதுகை மோனைகளின் முத்தமும் மோதலும்; நடைமிடுக்கு; நகைச்சுவை எடுப்பு; துள்ளி வரும் புள்ளி விவரம்; இலக்கிய இனிமை; இன்ன பிறவற்றுடன் குரலின் இனிமையும் எடுப்பும் இணைந்து நின்று கேட்டாரைப் பிணித்து வைத்து கேளாதாரை வேட்கை கொண்டு விரைந்து வரச் செய்யும் தனியாற்றல் நாவலரின் சொல்லாற்றல்.

மேடையில் நாவலர் தோன்றும் காட்சியே ஒரு தனிக் கவர்ச்சிதான். அவருடைய நாவின் கவர்ச்சி நற்றமிழின் மறுமலர்ச்சி எனலாம். எட்டு வகை மெய்ப்பாட்டு உணர்ச்சிகளையும் ஊட்டக் கூடியதாக இருக்கும் நாவலரின் பேச்சு. நகைச்சுவை நடனமிடும். ஆனால் வெறுப்பு நையாண்டியாக அமைந்து விடாது; வீரமுண்டு; வீண் வெகுளி கிளம்பாது—சில ஏற்ற இறக்கங்கள் எழில் பொங்க ஒலிக்கும். தமிழ் மொழி இலக்கணத்தின் 'ஏ' கார அழுத்தத்தின் ஏற்றம்

நாவலரின் நாவல்தான் எடுப்பாக இருக்கும். இலக்கணத்தில் இல்லாத, நாவலரின் தனியான முத்திரை பெற்ற அழுத்தங்கள், சில தனித் தன்மையுடன் எழிலும் சுவையும், பொருட் செறிவும் கொண்டு விளங்கும். எந்த இடத்தில் அந்த அழுத்தம் எப்படி இடம்பெறும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் வருகின்ற இடம் எதுவாயினும் நம்மால் சுவைக்காமல் இருக்கமுடியாது. அது நாவலர் அழுத்தம்; நம்முடைய அழுத்தமல்ல.

கல்லாரும், கற்றோரும் கலந்துநிற்கும் அரசியல் மேடையில் எல்லோரையும் ஈர்க்கும் வகையில் பேச்சு அமையும். அரசியல் மேடையில் பூகோள பாடம் 'போர்' நீங்கி சுவையுடன் நெஞ்சத்தில் பதியும். துறைமுகங்களின் பெயர்களை, விசாகப் பட்டினம், நாகப்பட்டினம், மசூலிப்பட்டினம், சென்னைப் பட்டினம், கொல்லம், கொச்சி, குளச்சல், கோழிக்கோடு என்று சொல்லடுக்கோடு சுவையூட்டிச் சொல்லும்போது நமக்கு இவர் ஆசிரியராக அமைந்திருந்தால் பூகோளத்தை இப்படி வெறுத்திருக்க மாட்டோமே என்ற எண்ணம் பிறக்கும்.

ஆளும் கட்சிக்கு ஆதரவாக நிற்போரின் பட்டியலைத் தருவார். அப்போது அவர் தரும் ஏற்றமும் அழுத்தமும் சுவையை ஏற்றி இன்பத்தை அளித்து நம்மைச் சொக்க வைக்கும். நகைச் சுவை நடமிடும். ஏற்றுமதி பெர்மிட்காரர்கள், இறக்குமதி பெர்மிட்காரர்கள், ஆலை அரசர்கள், தொழிற்சாலை அதிபர்கள், கோமான்கள், பூமான்கள், சீமான்கள், மிட்டாக்கள், மிராசுகள், பட்டாக்காரர்கள், பாளையக்காரர்கள் என்பதோடு ராஜா சர்—ர்—ர்—ர்கள் என்று இழுத்து ஏற்றி சருக்குவிடுகின்ற போது பொருட்சுவையும் நகைச் சுவையும் போட்டி போடும்.

அரசியல் மேடையில் கண்ணியம் குறையாமல் கருத்தைக் கவர்ச்சியாக வெளியிடுவார்.

இலக்கிய இன்பம் எப்படிப் பட்டது என்று சொல்ல வருவதற்கு முன்னர் ஐம்புலச் சுவைகளைப் பற்றிக் கூறி முடித்து விடுவார். பிறகு, "கண்ணகி கணவனை இழந்து கதறி அழுகின்ற கட்டத்திலும், 'இளங்கோ இந்த இடத்தை நல்லா எழுதியிருக்கார்டா' என்று சொல்லிக் கொண்டே படிப்பான். இப்படி அழுகின்ற கட்டத்திலும் உனக்குச் சுவையூட்டி நிற்பதுதான் இலக்கியம்" என்பார் நாவலர்.


நாவலரின் பேச்சைக் கேட்க நேர்ந்தால் ஒரு நாடகத்தைப் பார்ப்பது போல் ஆளையும், அவர்தம் அங்க அசைவுகளையும் காண வேண்டியதிருக்கும். சில இடங்களில் நாவுக்குப் பதில் சில கை அசைவுகளே பேசிக் கருத்தை வெளியிடும். நெஞ்சில் ஈரமற்றுப் பொருள் சேர்த்துப் பிறர்க்கு ஈயாது, எச்சில் கரத்தால் காக்கையும் விரட்டமாட்டான் என்ற நிலையிலுள்ள கஞ்சனை, கையை மடக்கிக் கொண்டு கன்னத்தில் ஒரு

குத்துவிட்டால்தான் எச்சில் கையையாவது உதறுவான் என்ற கருத்து அமைந்த குறளின் இறுதிப் பகுதியைச் சொல்லுகின்றபோது ‘ ‘கூன் கை அல்லாதவர்க்கு’ ’ என்ற சொற்களுடன் நாவலரின் கரமும் கூனாகி குறுகி வளைந்து குத்துவதற்கு முன் வந்து பொருளை விளக்கும்.

இலக்கிய இன்பம் எப்படி இருக்கும் என்றால், நாவலரின் பேச்சு போன்று இருக்கும் என்று சொல்லலாம். இலக்கிய இன்பம் நாவலரின் சொல்லாக உருவெடுத்து நம் செவிவழி புகுந்து சிந்தையைக் குளிர்விக்கிறது எனலாம். “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” என்ற புரட்சிக் கவிஞரின் பாடலைச் சொல்லும்போது நாவலர் அதைச் சொல்லுவதாகக் கொள்ள முடியாது. அங்கே சங்குதான் முழங்கும்.

தமிழ் இலக்கியப் படைப்புக்களைப் புத்தக உருவில் காண்கிறோம். அவற்றுக்கு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தரும் விளக்கவுரைகளை, இன்ப உரைகளை ஒலிப்பதிவு செய்து இவ்விலக்கியங்களுடன் அவை தரும் இன்பத்தையும் வாழவைப்பது; மாண்புமிகு நாவலர்க்குப் பெருமை என்று சொல்லுவதைவிட நமக்கு நன்மை, தமிழின்பத்திற்கு ஒரு நிலையான ஊற்று எனலாம்.

நாவலர் சொலல் வல்லார்
சோர்வு இல்லார்
அவர் இகல் வெல்வார்
ஏற்றம் பெறுவார்!



# இதயங் கவர்ந்த இளந்தாடி வேந்தர்

கவிமாமணி அ. மறைமலையான்

பள்ளிப் பருவத்தில் நான்பார்த்த பண்பாளர்
உள்ளத்தே இன்றும் உயிர்ச்சிலையாய் ஒளிர்கின்றார் !

என்ன எழில்தோற்றம் ! எத்துணைப் போர்மிடுக்கு !
பொன்னிகர் மேனிக்குள் எரிமலைத் தீ வெடிப்பு !

களிறுபோல் காட்டுகின்ற கரிய நிறச்சட்டை;
உளியொத்த சொல்வீச்சோ மடைமைக்குச் சாட்டை !

கண்ணிலே புரட்சி கருக்கொண்ட கனல்தெறிப்பு;
கன்னல் குரலிலோ வீணை இசைவிரிப்பு !

குற்றால அருவிபோல் கொட்டிடும் கனிப்பேச்சு;
குற்றம் புரிவாரைக் குத்துகின்ற வாள்வீச்சு !

சேதாரம் இல்லாத தீந்தமிழ்ச் சொற்கள்;
ஆதார அடுக்குகளோ மாணிக்கக் கற்கள் !

இழிவுற்ற திராவிடரை மேலேற்றும் ஏணி;
வழியற்றுத் தவிப்போரைக் கரையேற்றும் தோணி !

பெரியார்தம் கொள்கையெலாம் பேராறாய்ப் பாய
அரிமா முழக்கமிட்டார் அண்ணாவின் முதல்தம்பி !

வளந்தேடும் ஆசையிலை; வலம்வந்தார் நாட்டில்;
இளந்தாடி வேந்தராய் எனை அன்று ஈர்த்தார் !

அன்றுநான் கண்ட அறிவழகர் நாவலர்
என்றும் மறைமலையான் இதயம் கவர்பவரே!

குன்றுகள் பெயர்ந்தாலும் கொள்கை வழுவாமல்
வென்றிடும் நாவலரோ விண்மழை வாழியவே !




இடமிருந்து வலம்—

கவிஞர் அ. மறைமலையான்
டாக்டர் சை. வே. சிட்டிபாபு
மாண்புமிகு டாக்டர் நாவலர்
'கலைமாமணி' பட்டுக்கோட்டை குமாரவேல்

# மேதைகளை உருவாக்கிய மாமேதை

ஏ.என். சாமி (கோவை)

தமிழ் வாழத் தலை கொடுத்த குமணன் பிறந்த பூமியாம் கொங்கு மண்டலத்தில், கழகக் கொள்கையைக் குன்றில் இட்ட விளக்கென ஒளிபரப்பச் செய்தவர் நம் நாவலர்!

கோலம் கொஞ்சும் கோவைத் திருநகரில் உழைப்பால் உயர்ந்த தொழில் அறிஞர் ஜி.டி. நாயுடு அவர்களால் 1944-ஆம் ஆண்டு தந்தை பெரியாரிடமிருந்து கோவைக்கு அழைத்து வரப்பட்டார். அந்த தொழில் மேதை நடத்திய சர் ஆர்தர் ஹோப் கல்லூரியில் பேராசிரியராகவும் விடுதித் தலைவராகவும் இருந்து கொண்டே கழகப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்தான் நமது வணக்கத்திற்குரிய டாக்டர் நாவலர்!

கோவையில் அப்போது திராவிட மாணவர் இயக்கத்தை அவர் தோற்றுவித்தார். அதிலே அடியேனும் ஓர் உறுப்பினர் ஆனேன், அவரது தொலை நோக்குப் பார்வையாலும் தெளிவுரையாலும் ஈர்க்கப்பட்டு, அவர்தம் அறிவுரைப்படி ஒழுகியவர்கள் பின்னாளில் அரசியலிலும் அரசுப் பணிகளிலும் மேதைகளாகத் திகழ்ந்ததை என்னால் பார்க்க முடிந்தது. ஆகவே டாக்டர் நாவலர் அவர்கள் மேதைகளை உருவாக்கிய மேதை!

அழகுத் தமிழில் ஆணித்தரமான வாதங்களால் அடுக்கி வைத்த கருத்துக்களுடன் கூடிய அவருடைய முழக்கம் மக்கள் மன்றத்திலே பகுத்தறிவு இயக்கத்துக்கு வேலும் வாளுமாகப் பயன்பட்டது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய தலைவர்கள் நாவலர் மீது அன்று வைத்திருந்த அதே மதிப்பையும், மரியாதையையும், அரவணைப்பையும் இன்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களும் வைத்திருக்கிறார் என்றால்—நாவலருடைய அடக்கத்துக்கும், அறிவாற்றலுக்கும், வெள்ளை உள்ளத்துக்கும் கிடைத்த மரியாதை மட்டுமல்ல-விலை மதிப்பில்லாத பரிசு என்றுதான் கூற வேண்டும்.

புரட்சித் தலைவர் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்ததைப் போன்றே, இன்று புரட்சித் தலைவியின் அமைச்சரவையிலும் நிதியமைச்சர் பொறுப்பினை ஏற்றிருக்கும் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திட, அவரது 72-வது பிறந்த நாளில் என் நெஞ்சார வாழ்த்துகிறேன்,



டாக்டர் நாவலர்—'உதவிக்கரம்' ஜி. முத்து

## பகுத்தறிவாளர் நாவலர் பல்லாண்டு வாழ்க!

பெரியார்- பேரறிஞர் அண்ணா அடிச்சுவட்டில் உண்மையான பகுத்தறிவாளராக ஒளிவீசி வருபவர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்.


இளந்தாடி வேந்தராக இருந்தபோதே என் இளமைப் பருவத்தில் என் இதயத்தில் கொள்ளை கொண்ட ஏந்தல் அவர்.

அதனால் அவரது சீரிய தலைமையில் நான் திருமணம் புரிந்து கொண்டேன்.

புரட்சித் தலைவர் ஆட்சியில் நிதியமைச்சராக இருந்த 'நடமாடும் பல்கலைக் கழகம்' புரட்சித் தலைவின் ஆட்சியிலும் நிதி யமைச்சராகப் பொறுப்பேற்று இருப்பது- என்போன்ற நீண்ட காலத் திராவிட இயக்கத் தோழர்களுக்குப் பூரிப்பு அளிக்கும் வரலாற்று நிகழ்ச்சியாகும்.

தமது 72-வது பிறந்த நாளில் (11-7-1991) அடிவைக்கும் மாண்பு மிகு டாக்டர் நாவலர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்,

'உதவிக்கரம்' **ஜி. முத்து**



மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடன்
துணைவியார் திருமதி. டாக்டர் விசாலாட்சி அம்மையார்



தமிழக முதல்வர் மாண்புமிகு
புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா—
தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர்